**பின்வருவன, HNB அசூரன்ஸ் பி.எல்.சி. இன் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை 2024 இன் பக்கங்கள் 20 முதல் 23 வரை உள்ளடக்கப்பட்டுள்ள தலைவரின் செய்தியினது தமிழ் மொழிபெயர்ப்பு மாத்திரமே ஆகும்.**

2024 நிதியாண்டினை நாம் சிந்தனை செய்யும் மற்றும் எதிர்காலத்தினை கற்பனை செய்யும்போது, HNB அசூரன்ஸ் (HNBA) பி.எல். சி. இன் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் தடுமாற்றமற்ற மீளெழுச்சி குறித்து நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இலங்கையின் பொருளாதார நிலத்தோற்றமானது 2024 இல் நெருக்கடியிலிருந்து மீட்சிக்கு நகர்ந்தது. இது சீர்திருத்தங்கள் மற்றும் சர்வதேச உறுதுணையினால் இயக்கப்பட்டதுடன், நாட்டின் கடன் தரத்தினை ஒரு தரமுயர்த்தலுக்கு இட்டுச்சென்றது. உருவாகின்ற இந்த நிலைமைகளை மூலோபாய தொலைநோக்கு மற்றும் மீளெழுச்சியுடன் சமாளிப்பதில் நாம் எமது உறுதியான நிதியியல் செயற்திறனை நிலை நிறுத்தியது மாத்திரமன்றி விட்ச் நிறுவனத்தினால் 'A' தரமிடப்பட்ட இலங்கையிலுள்ள ஒரே ஆயுள் காப்புறுதி வழங்குநராக எமது நிலையினை திடப்படுத்திக் கொண்டுள்ளோம். இது கணிசமானளவு பொருளாதார தடைகளுக்கு மத்தியில் எமது வலுவான வணிக மாதிரிக்கான ஒரு உறுதிப்பாடாகும். HNB ஜெனரல் இன்சூரன்ஸ் (HNBGI) இலங்கையிலுள்ள சில 'A' தரமிடப்பட்ட பொது காப்புறுதி கம்பனிகளுள் ஒன்றாகும். மேலும், மீளாய்வாண்டில் HNBA குழுமத்தின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணமானது (GWP) முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 18.8 பில்லியனிலிருந்து 21% ஆல் வளர்ச்சியடைந்து ரூபா 22.7 பில்லியனை எட்டியது. இது எமது அணியின் கூட்டு முயற்சியினாலும் வாடிக்கையாளர்கள் எம்மில் வைத்துள்ள நம்பிக்கையினாலும் இயக்காற்றலான வணிக நிலத்தோற்றத்திற்கு பொருந்தும் எமது ஆற்றலினாலும் இயக்கப்பட்டது. குழுமமானது வரிக்கு பிந்திய ஒருங்கிணைக்கப்பட்ட இலாபமாக ரூபா 1.8 பில்லியனுக்கும் அதிகமாக பதிவுசெய்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 7மூ வளர்ச்சியாகும். எமது முக்கிய நோக்கமானது அனைத்து இலங்கையர்களுக்கும், அவர்களது அமைவிடத்தினை பொருட்படுத்தாது, முழுமையான மற்றும் அணுகத்தக்க காப்புறுதித் தீர்வினை வழங்குவதாகும். இலங்கையில் காப்புறுதி ஊடுருவலானது தாழ்நிலையில் காணப்படுகின்றவேளை, நாம் இதனை நாடு பூராவுமுள்ள எண்ணிலடங்கா வாழ்க்கைகளுக்கு ஒரு சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பாக கருதுகின்றோம்.

## நற்பெயர்மிக்க ஒரு நிறுவனம் ஒரு புகழ்பெற்ற நிறுவனம்

ஒரு ஆயுள் காப்புறுதி வழங்குநராக, நாம் வெறுமனே கொள்கைகளுக்கு மேலாக வழங்குகின்றோம்; நாம் நீடித்த உறுதிமொழியினை வழங்குகின்றோம், பல தசாப்தங்களுக்கும் மேலாக, எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது மிகவும் இக்கட்டான நேரங்களின்போது ஒரு உறுதியான முன்னிலையாக இருப்பதற்கு முயற்சிக்கின்றோம். எனவே, நம்பிக்கை என்பது வெறுமனே எமது வணிகத்தின் ஒரு கூறாகாது என்பதுடன், அது நாம் கட்டியெழுப்பியுள்ள அஸ்திவாரமாகும். இந்த நம்பிக்கையானது எமது நிறுவனக் கலாச்சாரத்தினுள் ஆழமாக பதிக்கப்பட்டுள்ளதுடன், நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையினை உருவமைக்கின்றது. இவை, வாடிக்கையாளர் மையமான கருவிகளை வடிவமைத்தல், கோரல் தீர்ப்பனவுகளில் நேர்மையினை பராமரித்தல், பணியாட்கள் நடத்தையில் உயர்ந்த நியமங்களை நிலைநிறுத்துதல், நிதியியல் அறிக்கையிடலில் முற்றான வெளிப்படைத்தன்மையினை வழங்குதல் மற்றும் எமது அனைத்து பங்காளிகளுடனும் ஊடாடுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இதுவே நாம் செயற்படுகின்ற விதத்தின் சாராம்சமாகும். மேலும், ஒரு முறைசாரான முக்கிய உள்ளூர் வங்கியான ஹட்டன் நெஷனல் வங்கியின் மரபுப் புகழிலிருந்து நன்மையடையும் அதன் ஒரு துணை நிறுவனமாக நாம் உயர்ந்த நிறுவன விழுமியங்களை நிலைநிறுத்தி நிலைபேறுடைய வளர்ச்சியினை தொடர்வதற்கும் நிதியியல் ஸ்திரத்தன்மையினை பராமரிப்பதற்கும் எம்மை இயலுமையாக்கியுள்ளது. இதன் விளைவாக நாம் கடுமையான ஆளுகை நியமங்களை பராமரிப்பதுடன் சாத்தியமான பொருளாதார, சமூக மற்றும் சூழல் தாக்கங்களை மேற்கொள்வதில் ஒரு வலுவான உறுதுணையாளராக தொடர்ந்தும் உள்ளோம். இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அம்சங்கள் எம்மை வேறாக்கிக் காண்பிப்பதுடன், எமது நற்பெயரினை ஒரு நம்பிக்கையின் ஒளிகாட்டியாக நிறுவியுள்ளதுடன், இத்தனித் தன்மையினை நாம் பெறுமையுடன் தழுவுகின்றோம்.

வருடம்பூராவும் பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்று நாம் மிகவும் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன், இது தனிச்சிறப்பிற்கான எமது கூட்டு முயற்சி மற்றும் அர்ப்பணிப்பிற்கான ஒரு சான்றாகும். இந்த அங்கீகாரங்கள், பணிபுரிவதற்கான ஒரு சிறப்பான இடம், பெண்கள் தோழமையான ஒரு முன்னணி பணியிடம், கணிசமானளவு MDRT தகைமை பெற்றுள்ளவர்களை கொண்டுள்ளவர்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. HNB அசூரன்ஸ் மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் ஆகிய இரு நிறுவனங்களும் முறையே ஆயுள் மற்றும் பொது காப்புறுதி பிரிவுகளில் குளோபல் பேங்கிங் அன்ட் வைனான்ஸ் இனால் 2024 இற்கான சிறந்த வங்கி காப்பீட்டு நிறுவனமாக பெயரிடப்பட்டுள்ளமை குறித்தும் நாம் பெருமையடைகின்றோம். கொழும்பு தலைமைத்துவ கல்விக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மிகச்சிறந்த முகாமையாளர் விருதுகளினுள் எமது முன்னாள் தலைவர், திருமதி. ரோஸ் குரே அவர்கள் சேர்க்கப்பட்டமையினையும் நாம் கண்டோம். இந்த சாதனைகள் ஒரு செழிப்பான மற்றும் உள்ளடக்கமான பணியிடத்தினை உருவாக்குதல், சிறந்த விளைவுகளை வழங்குதல் மற்றும் விதிவிலக்கான தலைவர்களுக்கு துணையளித்தல் என்பவற்றில் எமது அர்ப்பணிப்பினை கோடிட்டுக் காண்பிக்கின்றன.

## ஒரு சிக்கலான செயற்பாட்டுச் சூழலினை சமாளித்தல்

2024 இல் நாம் அழுத்தமான நுகர்வோர் செலவழித்தல், செலவழிக்கத்தக்க வருமானங்கள், குறைவான தனியார் துறை கடன் வளர்ச்சி என்பவற்றைக் கொண்ட ஒரு சிக்கலான செயற்பாட்டு சூழலுக்கு நாம் முகங்கொடுத்ததுடன் இவை புரள்வின் வளர்ச்சிக்கான எமது ஆற்றலில் தாக்கத்தினை ஏற்படுத்தின. தொடர்ச்சியான குறை வட்டிவீதங்களும் ஒரு தனித்துவமான சவாலினை ஏற்படுத்தியதுடன், இது எமது ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வணிகங்களிடையே முதலீட்டு வருமானத்தில் தாக்கத்தினை விளைவித்தது. இதன் விளைவாக எமது ஒட்டுமொத்த இலாபத்தில் கணிசமானளவு கீழ்நோக்கிய அழுத்தம் ஏற்பட்டது. இந்த வெளிவாரி காரணிகள் கணிசமானளவு சவால்களை உருவாக்கியவேளை, ஒப்பீட்டளவில் பரிமாற்றல் வீதத்திலான ஸ்திரத்தன்மையானது குறிப்பாக எமது பொது காப்புறுதிச் செயற்பாடுகளில் எமது அடிப்படை செலவினத்தில் சாதகமான பாதிப்பினை ஏற்படுத்தியதுடன் பரிமாற்றல் நட்டங்களையும் குறைத்தது. இந்த தடைகளுக்கு மத்தியில், ஆயுள் காப்புறுதி தவணைக்கட்டண வளர்ச்சியில் துறையினை நாம் விஞ்சியுள்ளதுடன், எமது வாடிக்கையாளர் தளத்தில் ஒரு மீளெழுச்சியினை அவதானித்தோம். இவை காப்புறுதிப் பாதுகாப்பின் மதிப்பில் அவர்களது புரிந்துணர்வினை வெளிக்காட்டியுள்ளதுடன், மேம்பட்ட நிலைத்தன்மை வீதங்களை பராமரிப்பதற்கும் எமது சராசரி பருமனை அதிகரிப்பதற்கும் எம்மை அனுமதித்துள்ளது.

எமது பொது காப்புறுதி வணிகமும் ஒரு சிக்கலான நிலத்தோற்றத்தினை சமாளித்தது. மோட்டார் வாகன இறக்குமதிகளிலான தொடர்ச்சியான கட்டுப்பாடுகள் மற்றும் உயர்வடையும் சுகாதாரச் செலவினங்கள் தனித்துவமான சவால்களை முன்னிலைப்படுத்தின. இந்தக் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், எமது மோட்டார் காப்புறுதித் தேக்கமானது ஒரு மெச்சத்தக்க 6% ஆல் வளர்ந்துள்ளதுடன், இப்பிரிவிலான எமது பலத்தை இது எடுத்துக்காட்டியுள்ளது. எமது மோட்டார் அல்லாத பிரிவுகளிலான மூலோபாய விரிவாக்கலினூடாக, இவை மிகவும் இலாபகரமாகவும் சிக்கனமாகவும் உள்ளதாக

தொடர்ச்சியாக நிரூபித்துள்ளன, நாம் எமது ஒட்டுமொத்த செயற்திறனை மேலும் மேம்படுத்தினோம். இதன் விளைவாக, எமது மோட்டார் அல்லாத மற்றும் மருத்துவமல்லாத தேக்கங்கள் எம்மை சந்தையில் முன்னணி நிலையில் வைத்துள்ளன. எமது ஆதனத்துறைப் பிரிவானது ஒரு திடமான பிரசன்னத்தினை பராமரித்துள்ளதுடன், எமது நிறுவன வணிகமானது வலுவாகக் காணப்பட்டது. முன்நோக்கிப் பார்க்கும்போது, 2025 இல் எமது நிறுவன வணிகத்தில் ஒரு திடமான உயர்வினை எதிர்பார்க்கின்றோம். மேலும், நாம் 100 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பலவற்றுடன் பங்குடைமையினை நிறுவியுள்ளதுடன், இது எமது ஒன்றிணைந்த ஆயுள் மற்றும் பொது காப்புறுதித் தீர்வுகளது பலத்தின் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு தனித்துவமான மதிப்பு முன்மொழிவுகளை வழங்குகின்றது.

## பங்காளிகளுக்கு பெறுமதியினை வழங்குதல்

எமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான எமது ஆற்றலானது, ஒவ்வொரு நாளும் உணர்வுடன் எமது நோக்கத்தை உள்ளடக்கியுள்ள எமது அர்ப்பணிப்புடைய பணியாட்களின் தோள்களில் திடமாக தங்கியுள்ளது. எமது வாடிக்கையாளர்களுக்கு தனிச்சிறப்புடன் சேவையாற்றுவதற்கு தொடர்ச்சியான, இலக்கைவைத்த பயிற்சி, பொருத்தமான வளங்கள், நியாயமான ஊதியம், மற்றும் ஒரு ஒத்துழைப்பான, உறுதுணையான பணியிடச் சூழலினை வழங்குவதன் மூலம் நாம் அவர்களுக்கு வலுவளிக்கின்றோம். எமது மக்கள் - அவர்களது கடப்பாடு, திறன்கள் மற்றும் அர்ப்பணிப்பு என்பன எமது வெற்றிக்குப் பின்னாலுள்ள இயக்காற்றி எனவும் நாம் சேவையாற்றும் சமூகங்களில் நாம் உருவாக்கும் சாத்தியமான தாக்கம் எனவும் நாம் அங்கீகரித்துள்ளோம்.

எமது அடித்தளமானது நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றில் கட்டியெழுப்பப்பட்டுள்ளவேளை இயக்காற்றலான புத்தாக்கத்தினை இயக்குவதற்கு நாம் ஒத்த அர்ப்பணிப்புடன் உள்ளோம். காப்புறுதித் துறையிலுள்ள பாரம்பரிய நடைமுறைகளுக்கு நாம் தொடர்ச்சியாக சவால் விடுப்பதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட தீர்வுகள், புதிய கருவிகள் மற்றும் மிகவும் சிக்கனமான தெரிவுகளை வழங்குவதற்கு புதுமையான வழிகளை ஆராய்கின்றோம். புத்தாக்கமானது எமது தொடர்ச்சியான மேம்பாட்டிற்கும் நாம் பாதுகாப்பவர்களுக்கு சிறந்த வழிமுறைகளில் சேவையாற்றுவதற்கும் வலுவளிக்கின்றது. இந்த புத்தாக்கமான எண்ணங்களை யதார்த்தமாக உருமாற்றுவதற்காக நாம் எமது அமைப்புமுறைகளை நவீனமயப்படுத்துவதற்கும், செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற புத்தாக்கமான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கும் SLFRS 17 கணக்கீட்டு நியமத்திற்கு மாறுவதற்கும் நாம் கணிசமானளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம். இந்த முதலீடுகள் செயற்பாட்டு வினைத்திறனுக்கான ஒரு வினையூக்கி என்பதுடன், கருவிகளை வடிவமைப்பதில் எமது ஆக்கத்திறனை கட்டவிழ்த்து எமது வாடிக்கையாளர்களின் நலனுக்காக காப்புறுதிச் சந்தையினை சாத்தியமாக ஊடருக்கும் புத்தாக்கமான தீர்வுகளை விருத்திசெய்வதற்கு எமக்கு வலுவளித்துள்ளன.

மேலும், ஒரு பொறுப்புமிக்க கூட்டாண்மை நிறுவனமாக எமது பங்கானது இலாபகரத்தன்மைக்கு அப்பால் நீடிக்கின்றது என நாம் நம்புகின்றோம். வருமானம், அமைவிடம் அல்லது மக்கள் தொகையினை பொருட்படுத்தாது ஒவ்வொரு இலங்கையரும் நம்பகமான மற்றும் விரிவான காப்புறுதிப் பாதுகாப்பிற்கான அணுகுதலை கொண்டிருப்பதனை உறுதிசெய்வதற்கு நாம் ஆழமான அர்ப்பணிப்புடன் உள்ளோம். இந்த அர்ப்பணிப்பானது எம்மை புத்தாக்கத்திற்கும் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் தனித்துவமான தேவைகளை விளித்துரைக்கும் ஒரு பன்முகமான கருவிகள் மற்றும் சேகைளை விருத்திசெய்வதற்கும், நிதியியல் பாதுகாப்பானது எமது சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரையும் எட்டுவதனை உறுதிசெய்வதற்கும் வழிநடத்துகின்றது. சமூக ரீதியாக தாக்கமுடைய மற்றும் நிதியியல் ரீதியாக ஒப்பேற்றக்கூடிய தீர்வுகளை வழங்குவதில் நாம் தொடர்ச்சியாக முன்னிறுத்தம் செய்கின்றோம்.

எமது நீண்டகால தொலைநோக்கில் நீடித்த நம்பிக்கையினை வைத்துள்ள எமது பங்குதாரர்களை நாம் ஒருங்கிணைந்த பங்காளிகளாக ஆழமாக மதிப்பளிப்பதுடன் நிறைவேற்று திறன்களை வெளிப்படுத்துகின்றோம். கவர்ச்சிகரமான மற்றும் நிலைபேறுடைய இலாபங்களை தொடர்ச்சியாக உருவாக்குவதற்கான எமது பொறுப்பினை நாம் ஏற்றுக்கொள்வதுடன், பங்குதாரர் பெறுமதியினை மேம்படுத்துவதில் நாம் உறுதியாய் முன்னிறுத்தம் செய்கின்றோம். இந்தக் கடப்பாடானது உயர்ந்த தரத்திலான நிறுவன ஆளுகை, நேர்மை மற்றும் நிதியியில் பொறுப்பினால் அடித்தளமிடப்பட்டுள்ளது. நிதியாண்டு 2024 இல் நாம் எமது முதலீட்டாளர்களின் பெறுமதியினை அதிகரித்துள்ளோம். எமது பங்கொன்றின் விலையானது 2023 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 56.60 இலிருந்து 42% ஆல் வளர்ச்சியடைந்து 2024 இன் இறுதியில் ரூபா 80.10 ஆக காணப்பட்டது. மேலும், நாம் 2024 இற்கு பங்கொன்றிற்கு ரூபா 3.90 பங்கிலாபத்தினை முன்மொழிவதில் மகிழ்ச்சியடைவதுடன் இது ஒவ்வொரு பங்குதாரருக்கும் மொத்த விளைவாக 50% இனை வழங்கியுள்ளது.

## சீரான செயற்திறன்

விதிவிலக்கான செயன்திறனைக்கொண்ட மற்றுமோர் வருடத்தினை அறிக்கையிடுவதில் நாம் பெருமையடைகின்றோம். இங்கு நாம் துறைசார் சராசரியிலும் பார்க்க கணிசமானளவு மேலான வளர்ச்சியினை அடைந்துள்ளதுடன், இது நாம் 2022 இலிருந்து தொடர்ச்சியாக நீடித்த ஒரு குறிப்பிடத்தக்க போக்காகும். இந்த வெற்றியானது எமது ஆலோசகர் விநியோகம், பங்குடைமை வழிகள் என்பவற்றுக்கிடையேயான எமது விற்பனை அணியின் அர்ப்பணிப்பான முயற்சியினாலும் எமது முழு அணியின் துணையுடனும் இயக்கப்பட்டது. எமது நிதியியல் மூலோபாயமானது குறுங்கால இலாபங்களிலும் பார்க்க சீரான மற்றும் உறுதியான வளர்ச்சிக்கு முன்னுரிமையளிக்கின்றது. இது இலங்கையில் மிகவும் சவால்மிக்க சந்தை நிலைமைகளிலும் மீளெழுச்சியினை வெளிக்காட்டுவதற்கு எம்மை இயலுமையாக்கியுள்ள ஒரு பண்பாடாகும். கடந்த நான்கு வருடங்கள் மீது நாம் கணிசமானளவு சராசரி வளர்ச்சியை அடைந்துள்ளதுடன், ஒரு குழுமமாக ஒரு கவர்ச்சிகரமான 20% வளர்ச்சியினை பராமாரித்துள்ளோம். இது நிலைபேறுடைய வணிக நடைமுறைகளுக்கான எமது கடப்பாட்டினை மேலும் எடுத்துக்காட்டுகின்றது. இது வருடத்திலிருந்து வருடம் எமது பங்கின் விலையில் கவர்ச்சிகரமான 42% வளர்ச்சியினாலும் எமது ஆயுள் நிதியத்தின் பலத்தினாலும் தெளிவாக்கப்படுகின்றது. ஆயுள் நிதியமானது 25% ஆல் அதிகரித்து 31 டிசம்பர் 2024 இல் ரூபா 38.3 பில்லியனை எட்டியதுடன் இது எம்மில் எமது வாடிக்கையாளர்கள் வைத்துள்ள நீடித்த நம்பிக்கைக்கான ஒரு சான்றாகும். மேலும், HNBA மற்றும் HNBGI என்பன வெற்றிகரமாக மூலதனப் போதுமை விகிதமாக முறையே 379% மற்றும் 219% இனை அடைந்துள்ளன. இது முறைமைப்படுத்தல் தேவைப்பாடான 120% இலும் பார்க்க அதிகமாகும். இந்த சாதனைகள் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் உறுதியின்மை என்பவற்றால் ஏற்பட்ட சவால்களை சமாளிப்பதில் எமது சாமர்த்தியத்தினை வெளிக்காட்டுவதுடன், இன்னலான காலத்தின்போதும்கூட செழிப்படைவதற்கான எமது கொள்திறனை நிரூபிக்கின்றது. எமது நிதியியல் செயற்திறனிலான மிகவும் விரிவான விளக்கமானது பக்கம் 124 இல் காணப்படும் நிதியியல் மூலதனத்தில் வழங்கப்பட்டுள்ளது.

## ஆளுகை மற்றும் நேர்மைக்கான அளவீட்டினை நிறுவுதல்

வலுவான நிறுவன ஆளுகைக்கான ஒரு உறுதியான நிலைப்பாட்டினை நாம் பராமரிப்பதுடன், இது எமது பங்காளிகளுடன் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கும், திடமான நீடித்த உறவினை வளர்ப்பதற்கும் ஒரு அடிப்படையாகும். இந்த அர்ப்பணிப்பானது முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை விஞ்சுகின்றது; எமது செயற்பாடுகளின் அனைத்து முகப்புகளிலும் நெறிமுறையான நடைமுறைகளை நாம் செயலூக்கமாக உட்பதித்துள்ளோம். எமது திடமான ஆளுகை கட்டமைப்புகள் செயற்பாட்டு சூழலின் சிக்கல்களை சமாளிப்பதில் விலைமதிப்பற்றதாக நிரூபணமாகியுள்ளன. சபையானது வெளித்தோன்றும் பாரியபொருளாதார, முறைமைப்படுத்தல், அரசியல் மற்றும் சமூக அபிவிருத்திகளை செயலூக்கமாக கண்காணிக்கின்றது. இது குழுமத்தின் நிதியியல் செயற்திறனிலான அவற்றின் தாக்கங்களை புரிந்துகொள்வதற்கும் பங்காளிகள் அக்கறைகளை பாதுகாக்கும் பொருத்தமான பதில்களை விருத்திசெய்வதனை இயலுமையாக்குவதற்கும் ஆகும். எமது குறிக்கோளானது வெறுமனே இணக்கப்பாடு காண்பதல்ல, தேவைப்பாடுகளை விஞ்சி நெறிமுறையான மற்றும் வெளிப்படையான வணிக நடைமுறைகளுக்கான ஒரு மாதிரியினை செயற்படுத்துவதற்கும் ஆகும்.

இதன் பிரகாரம், ஒக்டோபர் 2024 இல் அமுலுக்கு வந்த நிறுவன ஆளுகையிலான பட்டியலிடல் விதிகளிலான மாற்றங்களின் தேவைப்பாடுகளையும் குழுக்களின் மீள் ஒருங்கிணைத்தல் மற்றும் பணிப்பாளர்களின் நியமனம் ஆகிய தேவைப்பாடுகளையும் கடைப்பிடித்துள்ளோம். திரு. அசோகா குணசேகர அவர்களை நாம் கம்பனியின் சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளராகவும் திரு. தினேஷ் தர்மதாஸ அவர்களை HNB ஜெனரல் இன்சூரன்சின் சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளராகவும் நியமிக்கின்றோம். மேலும் நாம் பெயரிடல் குழு மற்றும் ஆளுகைக் குழுவினை மீள் ஒருங்கிணைத்துள்ளதுடன், விரிவான இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக திரு. லக்ஷமன் சில்வா அவர்களை சுயாதீன பணிப்பாளராக நியமித்து அவற்றிற்கு தலைமைதாங்கச் செய்துள்ளோம். மேலும், பட்டியலிடல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு அவசியமான கொள்கைகளையும் நாம் விருத்திசெய்துள்ளோம். மேலும், எமது செயற்பாடுகளில் சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) தேவைப்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் கடப்பாட்டுடன் உள்ளோம். ஊழல் மோசடிக்கு எதிரான சட்டத்துடன் இணங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதன் மூலம் நாம் நேர்மையான மற்றும் நெறிமுறையான வணிக நடைமுறைகளில் எமது கடப்பாட்டினை வலியுறுத்துகின்றோம். 2025 மார்ச் முதல் அமுலுக்கு வரும் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தினை கடைப்பிடிப்பதற்கான தயார்நிலையினை உறுதிசெய்வதற்காக நாம் மூன்றாம் தரப்பு நிபுணத்துவத்தினை முன்னியக்கமாக நாடியுள்ளதுடன், அமுலாக்கத்தினை மேற்பார்வை செய்வதற்கு பிரத்தியேகமாக வழிநடத்துக் குழுக்களையும் நிறுவியுள்ளோம். ஒரு கட்டமைக்கப்பட்ட இணக்கப்பாட்டு திட்டத்தினை முன்னெடுப்பதற்கான முதலாவது கம்பனிகளில் நாமும் காணப்படுவதுடன், இது உயர்ந்த ஆளுகை நியமங்களை நிலைநிறுத்துவதற்கும் எமது வாடிக்கையாளர்களை பாதுகாப்பதற்குமான எமது தொடர்ச்சியான கடப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது.

## இறுதிக் குறிப்புகள் மற்றும் பாராட்டுக்கள்

முன்னோக்கிப் பார்க்கும்போது, சாத்தியமான பொருளாதாரக் குறிகாட்டிகள் ஒரு நம்பிக்கையான கண்ணோட்டத்தினை வழங்கும்வேளை, எமது ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வணிகங்களின் எதிர்காலம் பற்றி நாம் நம்பிக்கையுடன் உள்ளோம். எமது மையமான வணிகத்தில், புத்தாக்கத்திற்கான எமது அர்ப்பணிப்பு மற்றும் எமது பங்காளிகளுக்கு நிலைபேறுடைய பெறுமதியினை வழங்குவதில் எமது அர்ப்பணிப்பு என்பவற்றிலான எமது முன்னிறுத்தத்தினால் பலமடைந்து 2025 ஆம் ஆண்டானது ஒரு வெற்றிகரமான ஆண்டாக இருக்கும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எமது முன்னால் தலைவர். திருமதி. ரோஸ் குரே அவர்களுக்கு, எமது சாதனைகளுக்கு அடிப்படையான அவரது தொலைநோக்கான தலைமைத்துவம் மற்றும் அர்ப்பணிப்பிற்கு நான் எனது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இறுதியாக, HNB அசூரன்ஸ் குழுமத்தின் மூலோபாயத் திசை மற்றும் வினைத்திறனை வடிவமைப்பதில் காரணமாயிருந்த இரண்டு சபைகளுக்கும் அவர்களது மதிப்புமிக்க நுண்ணறிவு மற்றும் புறநிலை பார்வைக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். உரிய பிரதம நிறைவேற்று அதிகாரிகளினால் வழிநடத்தப்பட்ட இரண்டு அர்ப்பணிப்பான குழுக்களும், கணிசமான சவால்களுக்கு எதிராக சிறந்த விளைவினை வழங்குவதற்காக அயராது உழைத்த மற்றும் புத்தாக்கமான அணுகுமுறை மற்றும் வெல்ல இயலாத மனஉறுதியினை வெளிப்படுத்தியுள்ளன. இறுதியாக, எமது தாய் நிறுவனமான ஹட்டன் நெஷனல் வங்கியின் உறுதுணைக்கும், எமது பெறுமதிமிக்க வணிகப் பங்காளிகள், முதலீட்டாளர்கள் மற்றும் முறைமைப்படுத்துபவர்களது தொடர்ச்சியான உறுதுணைக்கும் நான் நன்றியினை தெரிவிக்க விரும்புகின்றேன். HNB அசூரன்ஸ் மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் என்பன ஒரு திடமான அடித்தளத்தில் தொடர்ந்தும் கட்டியெழுப்பி எதிர்காலத்தில் சிறப்பான வெற்றியினை அடைந்து எமது அனைத்து பங்காளிகளுக்கும் அதிகரித்த பெறுமதியினை வழங்கும் என்பதில் நான் நம்பிக்கையுடன் உள்ளேன்.

**ஸ்டுவட் செப்மன்**
*தலைவர்*

கொழும்பு, இலங்கை
18 பெப்ரவரி 2025

**பின்வருவன, HNB அசூரன்ஸ் பி.எல்.சி. இன் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை 2024 இன் பக்கங்கள் 31 முதல் 35 வரை உள்ளடக்கப்பட்டுள்ள பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வினது தமிழ் மொழிபெயர்ப்பு மாத்திரமே ஆகும்.**

கணிசமான முதல் வரிசை வளர்ச்சியினால் குறிப்பிடப்பட்ட விதிவிலக்கான முன்னேற்றத்தைக் கொண்ட ஆண்டினை அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அடுத்த வருடத்தின் இறுதியில் ஆயுள் மற்றும் பொது வணிகத்தில் ஒரு குறிப்பிடத்தக் சந்தைப் பங்களிப்பினை கைப்பற்றும் எமது மூலோபாய இலக்கினை அடைவதில் நாம் உறுதியான பாதையில உள்ளோம். இந்த இலக்கானது மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட எமது ஐந்து வருட மத்தியகால திட்டத்துடன் இணைந்துள்ளது. எமது ஆயுள் வணிகமானது அதன் திட்டமிடப்பட்ட வளர்ச்சியினை விஞ்சி ஒரு குறிப்பிடத்தக்க 26% இனை அடைந்துள்ளதுடன், இது சந்தை சராசரியிலும் பார்க்க அதிகமானது என்பதுடன் கடந்த 4 ஆண்டுகளில் 26% சராசரி வளர்ச்சியினை பராமரித்துள்ளது. இந்த திடமான வளர்ச்சி உத்வேகமானது 2026 அளவில் எமது சந்தைப் பங்களிப்பு குறிக்கோளினை அடைவதற்கு எம்மை நிலைப்படுத்தியுள்ளது. குழுமத்தின் வரிக்கு பிந்திய இலாபமானது 7% வளர்ச்சியுடன் ரூபா 1,897 மில்லியனை பதிவு செய்து ROE ஆக 17% இனை வழங்கியுள்ளது.

இந்த விளைவுகள் எமது திறன்மிக்க அணியின் அர்ப்பணிப்பு மற்றும் ஆற்றல்களுக்கான ஒரு சான்றாகும். இதன் காரணமாக எமது நிறுவனமானது பணிபுரிவதற்கான சிறந்த இடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாட்டிலுள்ள பெண்கள் தோழமையான பணியிடங்களில் முதலாவதில் ஒன்றாகக் காணப்படுவதுடன், கூட்டாண்மை உலகில் ஒரு தலைவராக எமது நிலையினை மேலும் திடப்படுத்தியுள்ளது. எமது வெற்றியானது விட்ச் ரேட்டிங்ஸ் லங்காவினால் எமது காப்புறுதி நிதியியல் பலமானது 'A' தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதன் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. HNB எசூரன்ஸ் மாத்திரமே இலங்கையிலுள்ள ஆயுள் காப்புறுதி கம்பனிகளுள் 'A' தரத்தினைப் பெற்ற ஒரே நிறுவனம் என்பதுடன் HNBGI நாட்டிலுள்ள சில பொது காப்புறுதிக் கம்பனிகளுள் ஒன்றாகும்.

## ஒரு இயக்காற்றலான நிலத்தோற்றத்தினை சமாளித்தல்

2024 ஆம் ஆண்டில் செயற்பாட்டுச் சூழலானது உறுதியான சவால்கள் மற்றும் வாய்ப்புக்களை முன்னிலைப்படுத்தியது. இரண்டு தேர்தல்களினால் குறியிடப்பட்ட ஒரு ஆண்டு, தொடர்ச்சியாக குறைந்த செலவழிக்கும் வருமானங்கள் மற்றும் குறைவான வட்டி வீதங்கள் அனைத்தும் எமது ஆயுள் காப்புறுதி வணிகத்தில் அதன் விளைவினைக் கொண்டிருந்தன. ஒட்டுமொத்த உணர்விற்கு துணையளித்த இவை மெல்ல மெல்ல திடமடையும் பொருளாதார மாறிலிகளினால் உறுதிசெய்யப்பட்டன. பொதுக் காப்புறுதித் (GI) துறையானது புதிய வாகனங்களது இறக்குமதிகள் தொடர்பான சவால்களுக்கு முகங்கொடுத்ததுடன் இது மோட்டார் பிரிவில் தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன், சுகாதாரச் செலவினத்திலான அதிகரிப்பானது எமது சுகாதாரத் தேக்கத்தில் உள்ள விடுமிகைகளை பாதித்தது. மேலும், பயன்பாட்டு செலவினங்களிலான தளம்பல்களின் காரணமாக இரண்டு துறைகளும் உயர்வடைந்த செலவினத்தை அனுபவித்தன. முறைமைப்படுத்தல் கண்ணோட்டத்திலிருந்து, SLFRS 17 இன் அமுலாக்கலானது துறைக்கு ஒரு குறிப்பிடத்தக்க சவாலினை தோற்றுவித்தது; எவ்வாறாயினும், துறையிலுள்ள முன்னணி ஆலோசகர்களது ஈடுபாட்டுடன் காலக்கெடுவினை சந்திப்பதற்கு நாம் தயாராயுள்ளோம். ஆண்டின் இறுதிப் பாகத்தில் அரசியல் ஸ்திரத்தன்மையானது மேம்பட்டுள்ளவேளை, ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வணிகங்கள் இரண்டிற்குமான ஒட்டுமொத்த பொருளாதார சூழலானது சவால்மிக்கதாயுள்ளது என்பதைக் குறிப்பிடுதல் முக்கியமாகும்.

## மூலோபாய வளர்ச்சி மற்றும் உருமாற்றம்

இயக்காற்றலான சந்தை நிலைமைகளுக்கு பதிலளிப்பதில், நாம் எமது திடமான செயற்திறனை பராமரிப்பதற்காக ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வணிகங்கள் ஆகிய இரண்டிலும் மூலோபாய முன்னெடுப்புகளை பின்பற்றினோம். இது தரமான ஆட்சேர்த்தலில் கடுமையான முன்னிறுத்தம், வாடிக்கையாளர் தேவைகளை சந்திப்பதற்கு நெகிழ்வான பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கருவிகள் மற்றும் எமது செயற்பாடுகளினுள் தொழில்நுட்பத்தினை ஒருங்கிணைத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் உள்ளடங்கலான வாடிக்கையாளர்களுக்கு தொலைதூரத்திலிருந்து சேவையாற்றுவதற்கு தொழில்நுட்பத்தினையும் பயன்படுத்தியுள்ளோம். மேலும், நாம் முக்கிய திறனாளிகளை, குறிப்பாக எமது விற்பனைச் சேனையில், அவர்களது நலன் மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்வதன் மூலம் அவர்களை தக்கவைப்பதில் முன்னிறுத்தம் செய்தோம். எமது மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை மட்டங்கள் எமது வெற்றிக்கு பங்களித்துள்ளன. இந்த ஒருங்கிணைந்த முன்னெடுப்புகள் மீளாய்வாண்டின்போது ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வணிகங்களில் எமது செயற்திறனானது சந்தை சராசரியிலும் பார்க்க விஞ்சும் விதமாக வழிநடத்தியுள்ளன.

எமது ஐந்தாண்டு மூலோபாயத் திட்டமானது மூன்று முக்கிய தூண்களில் கட்டியெழுப்பப்பட்டுள்ளன: முகவர் மற்றும் பங்குடைமை வழிகளூடாக எமது விற்பனை சேனையின் விரிவாக்கலூடான வளர்ச்சி; மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவம்; மற்றும் தொழில்நுட்ப உருமாற்றல். எமது மையமான பின்முனை அமைப்புமுறைகளை உள்ளடங்கிய கணிசமான முதலீடு மற்றும் SLFRS அமுலாக்கல் என்பன எமது குறிக்கோள்களை வழங்குவதற்கு எம்மை நிலைப்படுத்தியுள்ளன. எமது ஆயுள் அமைப்புமுறையானது தற்போது இயங்கலையில் உள்ளதுடன் பொதுக் காப்புறுதி அமைப்புமுறையானது அடுத்த சில மாதங்களினுள் இயங்கலையில் செல்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக, ஒப்புரவளித்தல் மற்றும் கோரல் செயன்முறையினை சீரமைப்பதற்கு நாம் AI இனை அறிமுகப்படுத்துகின்றோம். ஒரு தாளற்ற செயற்பாடாக வருதல் மற்றும் செலவினத்தினை குறைத்தல் மற்றும் திருப்புமுனை நேரத்தினை மேம்படுத்துதல் நோக்கி நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை மேற்கொள்கின்றோம்.

## ஆயுள் காப்புறுதி

7.5% சந்தை பங்களிப்பினை அடைந்து மற்றுமோர் விதிகிலக்கான செயற்திறனையுடைய ஆண்டினை வழங்குவதில், நாம் எமது இலட்சிய இலக்கான 10% இனை 2026 அளவில் அடைவது நோக்கி மற்றுமோர் படி முன்னேறினோம். எமது வெற்றிக்கு அடித்தளமாக துல்லியமாக திட்டமிடப்பட்டு பயனுறுதியாக நிறைவேற்றப்பட்ட மூலோபாயங்கள் காணப்பட்டதுடன், இது உயர்ந்த போட்டியான நிலத்தோற்றத்தில் நிலைபேறுடைய வளர்ச்சிக்கான எமது அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கின்றது.

எமது மூலோபாயத்தின் ஒரு முக்கிய கூறாக, குறைந்த விலைப் புள்ளிகளில் உயர் பருமன்களை தொடர்வதைப் பார்க்கிலும் ஒரு பரந்த வாடிக்கையாளர் தளத்திற்காக தனித்துவமான பெறுமதி இயக்கமான கருவிகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. இந்த அணுகுமுறையானது பல்வேறு நிதியியல் பின்னணியிலிலுள்ள வாடிக்கையாளர்களின் பன்முகமான தேவைகளை வினைத்திறனாக விளித்துரைப்பதற்கு எம்மை அனுமதித்ததுடன், உள்ளடக்கத்தினை ஊக்கமளித்தவேளை, எமது வழங்கல்கள் பெறுமதிமிக்கதாகவும் போட்டித்தன்மையானதாகவும் இருப்பதனை உறுதிசெய்தது.

மேலும், ஒரு பலமான மற்றும் திடமான விற்பனைச் சேனையினை அங்கீகரிப்பதில் நாம் தெளிவாக வரையறை செய்யப்பட்ட முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களுடனான ஒரு கட்டமைக்கப்பட்ட தொழில் பாதையினை அறிமுகப்படுத்துவதன் மூலம் நாம் ஆலோசகரைத் தக்கவைப்பதனை முன்னேற்றும் எமது முயற்சிகளை மேம்படுத்தினோம். இந்த முன்னெடுப்பானது உயர் புரள்வு வீத சவால்களை விளித்துரைப்பதிலும் எமது ஆலோசகர்களுடன் பரஸ்பரமாக நன்மை பயக்கும் உறவுகளை கட்டியெழுப்புவதிலும் முன்னிறுத்தம் செய்தது. மேலும், சிறிய நடுத்தர

நிறுவனத் (SME) துறையில் நாம் எமது மூலோபாய முன்னிறுத்தத்தினை பராமரித்ததுடன், இது சனத்தொகையின் நிதியியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு துணையளிக்கும் நோக்கத்தினாலாகும். எமது "மைக்ரோ லைவ்" கருவியானது 2024 இல் கணிசமானளவு இழுவையினை அடைந்தது. இந்த வாய்ப்பில் பயன்பெறுவதற்காக, நாம் கைத்தொழில் அபிவிருத்தி சபையுடனான (IDB) கூட்டுசேர்வின் மூலம் எமது பங்காளி வலையமைப்பினைப் பரவலாக்கினோம். இது சி.ந.நி. முயற்சிகள் மற்றும் பாரிய நிறுவனங்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட காப்புறுதித் தீர்வுகளை வழங்கும்வேளை ஹட்டன் நெஷனல் வங்கியுடனான எமது நடைமுறையிலுள்ள உறவினையும் பலப்படுத்தும்.

மேலாக நாம் எமது ஆயுள் காப்புறுதி கொள்கையிலுள்ள எமது ஹெல்த் ரைடர் தெரிவுக்கும் மேலாக ஒரு புத்தாக்கமான குழும ஆரோக்கிய கருவியினை ஆரம்பித்தோம். இந்த புதிய வழங்கலானது கணிசமானளவு அக்கறையினைப் பெற்றுள்ளதுடன் இது எதிர்கால வணிக வளர்ச்சியினை இயக்குவதற்காகவும் எதிர்வரும் வருடங்களில் எமது இலாபத்திற்கு சாத்தியமாக பங்களிப்பு செய்வதற்காகவும் மூலோபாயமாக நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

## பொது காப்புறுதி

இலங்கையின் பொதுக் காப்புறுதித் துறையானது தொடர்ந்தும் பின்வருவனவற்றால் செல்வாக்கு செலுத்தப்படுகின்றது. பாரியபொருளாதார சூழலானது, 2019 ஈஸ்டர் தாக்குதல்கள், தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற நிகழ்வுகளினால் தொடர்ச்சியான எதிர்ப்பிற்கு முகங்கொடுத்துள்ளது. நாட்டில் மோட்டார் காப்புறுதிப் பிரிவின் மந்தமான செயற்திறனானது மட்டுப்படுத்தப்பட்ட வாகன இறக்குமதிகள் மற்றும் நுகர்வோர் செலவழிப்பிலான வீழ்ச்சி என்பவற்றின் காரணமாக என்பது தெளிவாகின்றது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், HNBGI துறையின் செயற்திறனை மூலோபாயமாக விஞ்சியுள்ளது. இதற்கு வாடிக்கையாளர் சேவை மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு அதன் புத்தாக்கமான தொழில்நுட்ப மூலோபாயம் மற்றும் குறிப்பிட்ட வாடிக்கையாளர் வேதனைப் புள்ளிகளை முன்னியக்கமாக இனங்கண்டு விளித்துரைப்பதற்கான ஒரு இலக்குவைத்த அணுகுமுறை என்பன துணைபுரிந்தன.

ஒரு முன்னணி பொது காப்புறுதியாளராக வருவது நோக்கிய அதன் முன்னேற்றத்தினை கம்பனி விரைவாக்கியதுடன், 2024 நிதியாண்டின் இறுதியில் ஒரு சந்தைப் பங்களிப்பாக 7% இனை அடைந்தது. முக்கிய முன்னெடுப்புகள், ஒரு விரிவான வாடிக்கையாளர் விசுவாசத் திட்டம் மற்றும் அணுகுதல் மற்றும் வாடிக்கையாளர் சேவையினை மேம்படுத்துவதற்காக நான்கு எண்களுடைய ஒரு புதிய ஹாட்லைனின் ஆரம்பம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

மேலும், HNBGI அணியின் அர்ப்பணிப்பு மற்றும் நிபுணத்துவம் என்பவற்றுடன் தொழில்நுட்ப உருமாற்றலிலான ஒரு மூலோபாய முன்னிறுத்தமும் வளர்ச்சியினை இயக்குவதற்கு காரணிகளாயிருந்தன. கம்பனியானது ஒரு உலக தரத்தையுடைய மையமான காப்புறுதி அமைப்புமுறையில் முதலீடு செய்ததுடன், SLFRS 17 இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக WTW's ResQ நிதியியல் அறிக்கையிடுபவர் இனை அமுலாக்கிய முதலாவது உள்ளூர் பொது காப்புறுதிக் கம்பனியாக வந்தது. இந்த முன்னேற்றங்களுடன், எமது செயற்பாட்டில் AI, இயந்திர பயிலல் மற்றும் ரோபாட்டிக்ஸ் என்பவற்றை ஒருங்கிணைத்தல் வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்தும், புதிய சந்தை வாய்ப்புக்களை திறக்கும், செயற்பாட்டு வினைத்திறனை பராமரிக்கும்வேளை நிலைபேறுடைய வளர்ச்சியினை அடைவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது.

## திடமான செயற்திறன்

HNBA குழுமமானது 2024 நிதியாண்டில் திடமான ஒட்டுமொத்த வளர்ச்சியினை அடைந்தது. மொத்த எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக்கட்டணமானது (GWP) ஆயுள் பிரிவில் 26% ஆல் அதிகரித்து துறைசார் சராசரியான 20% இனை விஞ்சியது. இது அறக்கட்டளை புதிய வணிகத்தில் 27% வளர்ச்சியினையும் புதுப்பித்தலில் 20% வளர்ச்சியினையும் உள்ளடக்கியிருந்தது. பொது காப்புறுதிப் பிரிவானது மொத்த எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக்கட்டணத்தில் 14% அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இதற்கு மோட்டார் அல்லாத காப்புறுதியில் 24% வளர்ச்சியும் மோட்டார் காப்புறுதியில் 6% வளர்ச்சியும் பங்களிப்பு செய்தன. கூட்டாக குழுமமானது 21% வளர்ச்சியினை அடைந்தது. மூலதனப் போதுமையினைப் பொறுத்தளவில், HNBA மற்றும் HNBGI ஆகிய இரண்டும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை விஞ்சியிருந்தன. HNBA இன் மூலதனப் போதுமை விகிதமானது 379% ஆகக் காணப்பட்டவேளை HNBGI இனது விகிதம் 219% ஆக காணப்பட்டதுடன், இவ்விரண்டும் கட்டாய விகிதமான 120% இலும் பார்க்க உயர்வாயிருந்தன.

கோரல்கள் பக்கத்திற்கு திரும்பும்போது குழுமமானது கொள்கை நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா 6,783 மில்லியனை ஏற்புடைய கோரல்களாக செலுத்துவதற்கான எமது கடப்பாட்டினை நிறைவேற்றியுள்ளது. இது வாடிக்கையாளர் திருப்தியினை உறுதிசெய்வதற்காக சில நியாயப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் கொள்கை நிபந்தனைகளுக்கு அப்பால் செலுத்தப்பட்ட கோரல்களையும் உள்ளடக்குகின்றது.

## ஆயுள் காப்புறுதி

பாரியபொருளாதார சவால்கள் இருந்தபோதிலும், HNBA திடமான வளர்ச்சியினை வெளிக்காட்டியது. தனிப்பட்ட மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களிடமிருந்தான மொ.எ.கா.த. ஆனது முறையே 26% மற்றும் 20% இனால் வளர்ச்சியடைந்தது. பங்குடைமை வழியானது புதிய வணிகத் தவணைக்கட்டணங்களை 38% வளர்ச்சிக்கு இட்டுச்சென்றதுடன், ஆலோசகர் விநியோக வழியானது 21% வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தது. ஒரு முன்னியக்கமான முதலீட்டு மூலோபாயமானது முதலீட்டு வருமானத்தில் 8% வளர்ச்சியினை விளைவித்து ரூபா 6,914 மில்லியனை எட்டியவேளை முகாமைப்படுத்தப்படும் நிதியானது 26% ஆல் அதிகரித்தது.

HNBA இன் தேறிய நலன்கள் மற்றும் செலுத்தப்பட்ட கோரல்கள் ரூபா 2,995 மில்லியனாக அதிகரித்தது. அதிகரித்த ஒப்புரவளித்தல் மற்றும் தேறிய கையகப்படுத்தல் கிரயங்கள் 20% மொ.எ.கா.த. வளர்ச்சியினை பிரதபலித்து ரூபா 2,466 மில்லியனை எட்டியது. உயர்வடைந்த செயற்பாட்டு செலவினங்கள் காணப்பட்டபோதிலும், பெரும்பாலும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான மென்பொருள் மற்றும் உட்கட்டமைப்புகளிலான முதலீடுகளின் காரணமாக, HNBA வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 2,358 மில்லியனையும் வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 1,657 மில்லியனையும் அடைந்ததுடன் இது வருடத்திற்கான 3% வளர்ச்சியாகும். வளர்ச்சிக்கு துணையாக பங்குதாரர் நிதியங்களிலிருந்தான மற்றும் ஆயுள் காப்புறுதி வணிகத்திலிருந்தான மிகை ஆகியவற்றிலான முதலீட்டு வருமானம் காணப்பட்டது. இது ஆயுள் காப்புறுதி வணிகத்தில் குறைவான வட்டி வீதங்கள் அழுத்தங்களை ஏற்படுத்திய போதிலும் ஆகும்.

மொத்த சொத்துக்கள் 24% ஆல் வளர்ச்சியடைந்து ரூபா 53,404 மில்லியனை எட்டியது. இதற்கு பிரதான காரணியாக அதிகரித்த நிதியியல் முதலீடுகளின் காரணத்தினாலாகும். மொத்த ஆயுள் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள் 25% ஆல் வளர்ச்சியடைந்து ரூபா 38,648 மில்லியனாகக் காணப்பட்டது. இது வருடத்தின் இறுதியில் நியமிக்கப்பட்ட காப்பீட்டுக் கணிப்பாளரினால் பரிந்துரைக்கப்பட்டவாறு ரூபா 1,350 மில்லியனை பங்குதாரர்களுக்கு மிகை மாற்றலின் பின்னராகும்.

## பொது காப்புறுதி

மோட்டார் அல்லாத பிரிவானது கடல்சார், தீ மற்றும் பொறியியல் காப்புறுதியில் திடமான செயற்திறனால் இயக்கப்பட்டு 24% வளர்ச்சியினை பதிவுசெய்தது. தீ மற்றும் பொறியியல் காப்புறுதியானது முறையே 166% மற்றும் 27% ஆல் வளர்ச்சியடைந்தன. வாகன இறக்குமதி

கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் மோட்டார் காப்புறுதியில் கம்பனி 6% வளர்ச்சியினை அடைந்ததுடன் மருத்துவ காப்புறுதியில் 21% வளர்ச்சியினையும் அடைந்தது. இது புதிய சந்தைகள் மற்றும் புதிய பிரிவுகளுக்கு விரிவாக்கும் கம்பனியின் முயற்சிகளின் வினைத்திறனை வெளிக்காட்டுகின்றது.

பல் வழி மூலோபாயமானது உயர் வினைத்திறனை நிரூபித்துள்ளதுடன், பின்வருவனவற்றிலிருந்து திடமான பங்களிப்பினை பெற்றுள்ளது. தரகர் வழி (19% வளர்ச்சி), முகவர் வழி (34% வளர்ச்சி) மற்றும் HNB வழி (6% வளர்ச்சி) மற்றும் ஏனைய வழிகளிலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பாக 28% உம் காணப்பட்டது. இந்த பன்முகமான வழிகள் HNBGI ஒரு விரிவான பரந்த வாடிக்கையாளர்களை வினைத்திறனாக எட்டுவதனை இயலுமையாக்கியுள்ளது.

HNBGI இனது மொத்த கோரல்கள் 7% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 3,704 மில்லியனை அடைந்ததுடன், மொத்த செலவினமானது கையகப்படுத்தல் செலவினங்கள், த.தொ தொடர்பான செலவினங்கள் மற்றும் பணியாட்கள் செலவினங்களின் காரணமாக 11% ஆல் உயர்ந்து ரூபா 2,627 மில்லியனாக உயர்வடைந்தது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், HNBGI அற்புதமான இலாப வளர்ச்சியினை அடைந்து வரிக்கு பிந்திய இலாபமானது ரூபா 240 மில்லியனை அடைந்து 59% அதிகரிப்பினை பிரதிபலித்தது. இந்த சாதனையானது குறைவடைகின்ற வட்டி வீதங்களிலிருந்தான அழுத்தங்கள், பரிமாற்றல் வீதங்களின் விளைவு மற்றும் குறிப்பிடத்தக்களவு மீள்காப்புறுதி வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டபோதிலும் ஆகும். உயர்ந்த மீள்காப்புறுதிச் செலவினத்திற்கான காரணியாக, ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான மோட்டார் பிரிவின் 100% வேலைநிறுத்தம்-கலவரம் மற்றும் உள்நாட்டுக் கலவரம் - பயங்கரவாதம் (SRCC & TC) தவணைக்கட்டணத்தின் இடைநிறுத்தத்தினாலாகும்.

மொத்த சொத்துக்கள் 7% ஆல் வளர்ச்சியடைந்து ரூபா 10,229 மில்லியனாக காணப்பட்டதுடன் இதற்கு பிரதான காரணியாக நிதியியல் முதலீடுகள் காணப்பட்டன. பொதுக் காப்புறுதிப் பொறுப்புக்கள் 4% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 4,507 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இதற்கான பிரதான காரணியாக SRCC & TC தவணைக்கட்டணங்களின் இடைநிறுத்தமாக காணப்பட்டது.

## புதிய கருவிகள் மற்றும் வாடிக்கையாளர் மையமான தீர்வுகள்

நெகிழ்வுத் தன்மையுள்ள வாடிக்கையாளர் மையமான தீர்வுகளை வழங்கும் எமது கடப்பாட்டில் நாம் எமது போட்டித்திறனை பராமரிப்பதற்காக எமது கருவிகளை தொடர்ச்சியாக தரமுயர்த்தினோம். இதன் பிரகாரம், எமது ஆயுள் வணிகத்தினூடாக நிறுவன வாடிக்கையாளர்களுக்கு சுகாதாரக் காப்புறுதி தீர்வுகளை உள்ளடக்கும் விதமாக எமது வழங்கல்களை விரிவாக்கியதுடன் தனிநபர்களுக்கு சுகாதாரக் காப்புறுதியினை இலவசமான ஒரு நலனாக வழங்குவதனைத் தொடர்ந்தோம். இலங்கையின் நாடுகடந்து தொழில்புரிபவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட கருவிகளை அறிமுகம் செய்வதன் மூலம் சந்தையின் கேள்விக்கு நாம் பதிலளித்துள்ளோம். சிரேஷ்ட பிரஜைகளின் வளர்ச்சியடையும் தேவைகளை இனங்கண்டு நாம் காலப்படி அடிப்படையான ஓய்வூதியக் கருவிகளை விருத்தி செய்கின்றோம். அதேபோன்று எமது பொது காப்புறுதிப் பிரிவானது சூரியவலு உள்ளடங்கலான நிலைபேறுடைய வலுத் தீர்வுகள் மற்றும் சைபர் பாதுகாப்புக் கருவிகள் போன்ற புதிய வழங்கல்களை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், HNB வங்கியுடனான கூட்டு முயற்சி உள்ளடங்கலாக சி.ந.நி. மற்றும் நுண்-பிரிவுகளுக்கான குறிப்பிடப்பட்ட கருவி முன்மொழிவுகளையும் உருவாக்கியுள்ளோம்.

## எமது மக்கள் முதலில், அணுகுமுறை

